பக்கங்கள் 15+4

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 05 திங்கட்கிழமை 19.05.2025 | அதிர்வு 289

## சாமரவுக்குப் பிணை



பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க இன்று திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு விளக்கமறியல்!



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றியபோது, தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்துக்குப் பணம்

03

# சிறீதரனின் கூற்று தவறு

### தமிழரசின் பதில் தலைவர், பதில் பொதுச்செயலாளர் நியமனங்கள் சட்டபூர்வமானவை என்று சி.வி.கே. பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)


"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர், பதில் பொதுச் செயலாளர் நியமனங்கள் அங்கீகாரம் இல்லாதவை எனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூறுவது தவறு. கட்சியின் மத்திய செயற்குழுவின் நியமனங்கள் சட்டபூர்வமானவை."

- இவ்வாறு இலங்கைத் தமிழ



ரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

03



## தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு!

தெஹிவளை, நெடிமல பகுதியில் கடையொன்றில் இன்று திங்கட்கிழமை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இனந்தெரியாத சந்தேக நபர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## வியாழக்கிழமை நாடு திரும்பும் பஸில் மொட்டுக் கட்சியுடன் அவசர சந்திப்பு



ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு அமெரிக்கா பறந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை அவர் இலங்கை வருவார் எனக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

நாடு திரும்பிய கையோடு கட்சி முக்கியஸ்தர்களுடன் பஸில் சந்திப்பு நடத்தவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, கட்சியை வழிநடத்தும் பொறுப்பை நாமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துவிட்டதால், நேரடி அரசியல் செயற்பாட்டில் பஸில் ராஜபக்ஷ பங்கேற்க மாட்டார் எனவும் அறியமுடிகின்றது.

## மிலான் இன்று கைதாகி பிணையில் விடுவிப்பு!



இன்று அதிகாலை கைது செய்யப்பட்ட மொட்டுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்கவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிற்பகல் பிணை வழங்கியுள்ளது.

03

# முப்பது வருட யுத்தத்தின் மூல காரணங்களுக்கு தீர்வு தேட முயலாமல் வெற்றிக் கொண்டாட்டமா?

## மனோ கணேசன் எம்.பி. கேள்வி



"இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இலங்கையர்களாக நினைவுகூரும் ஒரு எதிர்காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்க வேண்டும். தெற்கில், வடக்கில் நிகழ்ந்த அரச மற்றும் அரசற்ற பயங்கரவாத நிகழ்வுகளுக்கு எதிரான வெற்றி கொண்டாட்டங்களையும் கூட கொண்டாடலாம். ஆனால், இந்த இலக்கை அடைய இலங்கை நாடு, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களை தேடி அறிந்து அவற்றுக்குத் தீர்வு தேட வேண்டும். மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ என்ற எவராக இருந்தாலும், தீர்வுகள் தேடா விட்டால், நாம் நின்ற அதே இடத்திலேயே நிற்போம். இதுதான் உண்மை."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள விசேட பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை சமூகத்தில் சமூகத்தில் மரணித்துப் போன உறவுகள், இன்று முள்ளிவாய்க்காலிலும், தெற்கிலும் நினைவு கூரப்படுகின்றார்கள். தெற்கில் இராணுவ வெற்றி விழா நடத்தப்படுகின்றது. நினைவு கூரலும், வெற்றி விழாவும் ஒருசேர நடத்தலாம். அந்த நாள் வர வேண்டும்.

ஆனால், அந்த இலக்கை, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களைத் தேடி அறிந்து அவற்றுக்குத் தீர்வு தேடாமல் அடைய முடியாது.

1948 ஆம் வருட குடியுரிமை – வாக்குரிமை பறிப்புச் சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா – செல்வா மற்றும் டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிகாவின் 2000 ஆம் வருட தீர்வுத் திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீனப்படுத்தப்பட்டமை, 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முகத் தன்மை அங்கீகரிக்கப்படாமை, கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படாமை, யுத்தத்தின் பின் மஹிந்த – பான் கி மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப்படுத்தப்பட்டமை ஆகிய தவறுகளைத் திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்." – என்றுள்ளது.

# கல்கிஸை துப்பாக்கிச் சூடு: பிரதான துப்பாக்கிதாரி கைது

கல்கிஸையில் சில்வெஸ்டர் வீதிக்கு அருகிலுள்ள சந்தியில் 19 வயது இளைஞர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற பிரதான துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் மற்றும் குற்றச் செயலுக்கு ஒத்தாசையாக இருந்தவர் என இரண்டு நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரான பிரதான துப்பாக்கிதாரியிடம் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, பதினைந்து 9 மி.மீ. தோட்டாக்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கொட்டாவ விஹார மாவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை விமானப்படையின் முன்னாள் உறுப்பினர் ஆவார். அவர் அங்கு ஒன்றரை ஆண்டுகள் சேவையில் ஈடுபட்டுவிட்டு தப்பியோடி வந்துள்ளார்.

கொட்டாவை, மாம்புல்கொடை பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரின் வீட்டின் பின்புறத்தில் குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் மோட்டார் சைக்கிளின் பாகங்கள், இரண்டு போலி இலக்கத் தகடுகள் புதைக்கப்பட்டிருந்தன.



கடந்த 10 ஆம் திகதி குற்றச் செயலுக்கு உதவிய மற்றும் ஒத்தாசையாக இருந்த இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் தற்போது நாட்டிலுள்ள அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கல்கிஸைப் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று தெஹிவளை – கல்கிஸை நகர சபை திண்மக்கழிவு முகாமைத்து பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தெஹிவளை, ஆபர்ன் பிளேஸைச் சேர்ந்த 19 வயது பிரவீன் நிசங்க என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கல்கிஸைப் பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்திருந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு சந்தேகநபர்கள் கொலை செய்யப்பட்ட நபரைத் துரத்திச் சென்று, பின்னர் அருகில் இருந்து பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்துவது சிசிரிவி கமராவில் பதிவாகியிருந்தது. பிரதான வீதியில் பொதுமக்கள் முன்னிலையில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்தேறியிருந்தது.

கொல்லப்பட்டவர் தற்போது விளக்கமறியலிலுள்ள தெஹிவளை சத்துரி என்று அழைக்கப்படும் போதைப் பொருள் கடத்தில் ஈடுபட்ட பெண்ணின் மகன் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரது மகளும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் இன்று அறிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சாமரவுக்கு...

பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாமர சம்பத் தசநாயக்க எம்.பி. இன்று காலை 9 மணியளவில் பதுளை நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது, நீதிவான் அவரை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவைப் பிறப்பித்தார்.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராகப் பணியாற்றும்போது, முன்பள்ளி சிறுவர்களுக்குப் பைகள் வழங்க அரச வங்கியால் வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபா பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் அமைச்சர்...

செலுத்தியமை தொடர்பில், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜரானதைத் தொடர்ந்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### பொய்யுரைக்கின்றார்...

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்குத் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் நியமனங்களுக்கு உரியவர்களைக் கட்சி நியமித்து வருகின்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கட்சிக்குள் சர்ச்சையொன்று உருவாகியிருந்த போதும் இது சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

குறிப்பாக பூநகரி மற்றும் கரைச்சி சபைகளுக்கும் தவிசாளர், உப தவிசாளர் பெயர்கள் கட்சியின் மாவட்டக் கிளையால் என்னிடம் வழங்கப்பட்டது.

அதனைக் கட்சியின் பொதுச்செயலாளர் கையொப்பம் வைத்தே தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டி இருந்தது. அதற்கமைய கட்சியின் தற்போதையாய் பதில் பொதுச்செயலாளருக்கு நான் தெரியப்படுத்தி இருந்த நிலையில் அவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்து தனது கையொப்பத்தை வைத்து தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்புவதாக இருந்தார்.

இவ்வாறான நிலையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சிக் கிளையின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி கட்சிக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதாவது கட்சியின் தற்போதைய பதில் பொதுச்செயலாளராக இருக்கின்ற எம்.ஏ.சுமந்திரனைத் தான் பதில் பொதுச்செயலாளராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், அவரது நியமனத்தைப் பொதுச்சபை அங்கீகரிக்கவில்லை என்றும் சுமந்திரன் தொடர்பில் சில விமர்சனங்களை சிறீதரன் எம்.பி. முன்வைத்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சுமந்திரன் என்னையே பதில் பொதுச்செயலாளராக ஏற்கவில்லை என்று கூறுபவர்களுக்கு நான் ஏன் கையொப்ப வைக்க வேண்டும் என மேற்கூறிய அந்த இரண்டு சபைகளின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுப் படிவத்தில் கையொப்பம் வைக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஓர் இணக்கப்பாட்டை எட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு தேர்தல் ஆரம்ப காலம் முதல் இப்போது வரை கட்சிக்குள் இணக்கப்பாட்டையே ஏற்படுத்தி வருகின்றோம்.

இவ்வாறான நிலைமையில் நீங்கள்-தான் இப்போது கட்சியின் பதில் பொதுச் செயலாளர் என்றும், அந்த அடிப்படையில் கையொப்பம் வைக்குமாறு சுமந்திரனிடம் கூறியிருந்தேன்.

அதன் பின்னர் அவரும் பெயர் குறிப்பிடப்பட்ட அந்தப் பிரதேச தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்களுடன் பேசியிருந்தார். இவ்வாறாக ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் கலந்து பேசித்தான் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வந்திருக்கின்றோம்.

மேலும் கட்சியின் பதில் தலைவரான என்னையோ, பதில் பொதுச்செயலாளரையோ அங்கீகரிக்கப்படவில்லை எனச் சொல்வதில் நியாயம் இல்லை. ஆனால், ஏதோவொரு சில காரணங்களால் சிறீதரனைப் பொறுத்தவரையில் நியாயம் இருக்கலாம். ஆனால், கட்சிக்குள் வெற்றிடமாகும் பதவிகள் மத்திய செயற்குழுவால் நிரப்பப்படலாம்.

இவ்வவாறிருக்கையில் கட்சியின் பதவிகளில் இருப்பவர்கள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று இல்லை. கட்சியின் யாப்பிலும் அவ்வாறு இல்லை.

ஆக தமிழரசுக் கட்சியின் யாப்பிலோ, சட்டத்திலோ இல்லாத ஒரு விடயத்தைப் பேசுகின்றார்கள். பதில் தலைவர், பதில் பொதுச்செயலாளர் பதவி குறித்து கட்சியின் மத்திய செற்குழு தீர்மானிக்க முடியும்.

எனவே, மத்திய செயற்குழுவால் நியமிக்கப்பட்ட இந்தப் பதில் தலைவர் மற்றும் பதில் பொதுச்செயலாளர் நியமனங்கள் சட்டபூர்வமானவை. கேள்விக்கு உட்படுத்த முடியாது. கட்சி யாப்பின் பிரகாரம்தான் எல்லாம் நடக்கின்றது. அதிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம், அனுமதியுடனே எல்லாம் நடக்கின்றது.

மத்திய செயற்குழுவின் நியமனங்களைப் பொதுச்சபை அங்கீகரிக்க வேண்டும் என்பதும், மத்திய செயற்குழுவின் நியமனங்கள் அங்கீகாரம் இல்லாதவை என்று சிறீதரன் கூறுவதும் தவறு. இந்த நியமனங்கள் சட்டபூர்வமானவை." - என்றார்.

### மிலான் இன்று...

காணி ஒன்றின் வரைபடத்துக்கு அனுமதி வழங்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக அரசுக்கு இழப்பு ஏற்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டு மிலன் ஜயதிலக்க இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

இவர் தொம்பே பிரதேச சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் இந்த முறைகேடு நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சகலருக்கும் நீதி வேண்டும்

‘ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியாக மனிதரையே கடிப்பது’ என்பது போல, இப்போது சமூக ஊடகங்களின் கட்டுப்பாடற்ற, கீழ்த்தரமான பாய்ச்சல் சமூகத்தின் பல அங்கங்களையும் பாதித்து, கடைசியாக நீதித்துறை மீதும் தனது வாயை வைக்கத் தொடங்கியுள்ளது.

சமூக ஊடகங்களின் பொறுப்புக் கூறும் கடப்பாடற்ற, கீழ்த்தரமான நடவடிக்கைகளினால் சமூகத்தின் பல அங்கங்களும் பாதிக்கப்பட்ட போது, அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய சட்ட - ஒழுங்கு துறையும், நீதி துறையும் மெத்தனமாகவே நடந்து நடந்து கொண்டு வந்தன என்றே கூற வேண்டும். இப்போது விவகாரம் நீதித்துறை மேலேயே பாய ஆரம்பித்து விட்டதால், ‘சுளகு தனக்குத் தனக்கு என்றால் படக்குப் படக்கு என்று அடிக்கும்’ என்பது போல நீதித் துறை தரப்பினர் சீறத் தொடங்கியுள்ளனர்.

நீதித்துறை அலுவலர்களை நியாயமற்ற முறையில் குறிவைத்து, நீதி அமைப்பின் நேர்மையை அச்சுறுத்தும் விதத்தில், சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் இணைய உள்ளடக்கம் போன்றவை அதிகரித்து வருகின்றமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டு இருக்கின்றது.

நீதித்துறையின் நற்பெயருக்கும், நீதி, நிர்வாகத்திற்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் இதுபோன்ற பல பதிவுகள் பொதுமக்களால் பரவலாகப் பகிரப்பட்டு, பரப்பப்பட்டு, கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நீதியை நிலை நாட்டுவதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் அதன் சுதந்திரம் பாதுகாக்கப்படுவது அவசியம் என்று சுட்டிக்காட்டும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதித்துறை நடத்தையை ஆராய்வதற்கான ஒழுங்கு ரீதியான நடைமுறைகளை சட்டம் வழங்குகிறது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. நீதித் துறை விடயத்தில், பொது விமர்சனம் அல்லது சமூக ஊடக ஊகங்கள் மூலம் அதனைச் செய்ய முடியாது என்பதையும் அது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றது.

“சட்ட வல்லுநர்களும் பொதுமக்களும் அறிக்கைகளை வெளியிடுவதையோ, கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதையோ அல்லது விசாரணைகளை பாரபட்சம் காட்டக்கூடிய அல்லது செயல்முறையில் தேவையற்ற பொது அழுத்தத்திற்கு வழிவகுக்கும் எந்தவொரு நடத்தையிலும் ஈடுபடுவதையோ தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்” என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் கூறியுள்ளது.

உண்மைதான். ஏனைய துறைகளையும் சமூக வாழ்வியலில் இருக்கும் சாதாரண மக்களையும் மோசமாகப் பாதிக்கின்றமை போல, பொறுப்பேற்ற சமூக ஊடகச்செய்திகள், பதிவுகள், குறிப்புகள், கருத்துகள் நீதித்துறையையும் நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளன.

இது விடயத்தில் தன்னுடைய இரும்புக் கரங்களை நீதித்துறை தொடர்பான பதிவுகள் பற்றிய விவகாரங்களில் மட்டுமல்லாமல், பொது மக்கள் அனைவருக்கும் நீதி தாமதமின்றிக் கிடைக்கும் விதத்தில் சட்ட, ஒழுங்கு நீதித்துறை பிரயோகிக்க வேண்டும். அதுதான் சரியான நடவடிக்கையாக இருக்க முடியும்.



# 7 கோடி 90 லட்சம் ரூபா மதிப்புள்ள குஷ் போதையுடன் வெளிநாட்டவர்!

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் இன்று காலை கைது!!

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் இன்று காலை வெளிநாட்டு பயணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

7 கோடி 90 லட்சம் ரூபா மதிப்புள்ள குஷ் போதை பொருளை இலங்கைக்குக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவால் 21 வயதுடைய தாய்லாந்து நாட்டவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞன் தாய்லாந்தில் போதைப் பொருள் பொதியை பெற்று, மலேசியாவின் கோலாலம்பூருக்குச் சென்று, அங்கிருந்து இன்று அதிகாலை 12 மணிக்கு மலேசியா ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த நிலையில், அவரது பொதிகளில் இனிப்புகள் அடங்கிய பல பக்கெட்டுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 கிலோ 910 கிராம் குஷ் போதைப் பொருளை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைதான பயணியை, அவர் கொண்டு வந்த போதைப் பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கற்களால் தக்கப்பட்ட நிலையில் காயமடைந்த ஒருவர் உயிரிழப்பு!

மொனராகல, ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலுத்வெவ பகுதியில் இனந் தெரியாதவர்கள் இருவர் மீது கற்களால் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இருவரில் ஒருவர் ஹம்பேகமுவ பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொடையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சமரதுங்க ஆராச்சிகே ராஜபக்ஷ மற்றும் அதே



பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஹேவாவலி முனிகே குணதாச ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முதற்கட்ட விசாரணையில், ஒரு கும்பல் கற்கள் மற்றும் ஆயுதங்களால் இருவரையும் முகம் மற்றும் தலையில் தாக்கியது என்று தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையை செய்தவர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

உயிரிழந்தவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# நாட்டில் நிலவும் உப்புத் தட்டுப்பாடு பேக்கரி உற்பத்திகளை பாதித்துள்ளது

நாட்டில் நிலவி வரும் உப்பு தட்டுப்பாடு பேக்கரி உற்பத்திகளை பாதித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹோட்டல் கைத்தொழிற்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பேக்கரி உற்பத்தியாளர்களுக்கும் உப்புப் பற்றாக்குறை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உப்பு கொள்வனவு செய்வதற்காக நேரத்தை செலவிட நேரிட்டுள்ளது என்றும் பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல்பொருள் அங்காடிகளுக்கு பணியாளர்களை அனுப்பி நேரத்தை விரயம் செய்து உப்பு கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

பெரிய அளவிலான பேக்கரி உற்பத்தியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 200 கிலோ கிராம் உப்பு தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

பேக்கரி மற்றும் ஹோட்டல்துறையைச் சார்ந்தவர்கள் உப்பை களஞ்சியப்படுத்துவதால் எதிர்காலத்தில் பொது மக்களுக்கு உப்பு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# ‘‘மறைந்த தலைமுறைகளின் மறந்த சம்பவங்கள்’ நூல் வெளியீடு!

( வி.ரி.சகாதேவராஜா)

நாடறிந்த கவிஞர் காரைதீவைச் சேர்ந்த அமரர் பொன்.சிவானந்தன் தனது 82 ஆவது அகவையில் எழுதிய ‘மறைந்த தலைமுறைகளின் மறந்த சம்பவங்கள்’ எனும் நூலின் வெளியீட்டு விழா நேற்று (18) ஞாயிற்றுக் கிழமை மாலை காரைதீவில் இடம் பெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழா அவரது புத்திரன் பொறியியலாளர் சிவானந்தன் கனகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அழைப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜி.அருணன், உதவி பிரதேச செயலாளர் கே. பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித் துறைத் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா நயவுரை நிகழ்த்தினார்.

நிகழ்வுக்கு காரைதீவு கல்முனை பாண்டிருப்பு மண்டூர் போன்ற இடங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.









# 23 பவுண் நகையை தொலைத்தவரை தேடிக் கண்டுபிடித்து நகை ஒப்படைப்பு!

## சுன்னாகம் நகைக்கடை உரிமையாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணத்தில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர், 23 பவுண் நகையை தொலைத்த பெண்ணை தேடிக் கண்டுபிடித்து, அந்த நகையை அவரிடமே ஒப்படைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது,

பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் கடந்த 09.04.2025 அன்று தனது நகையை தவறவிட்டுள்ளார். இந்த நிலையில், இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த நகையை கண்டெடுத்தவர் அதனை நகை கடையில் கொடுத்து வேறு நகை செய்வதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது, நடந்த சம்பவத்தையும் நகைக்கடை உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

இதன்போது, நகைக்கடை உரிமையாளர் இது தவறு என்று அவருக்கு எடுத்துக்கூறிய பின்னர், நகை காணாமல் போனதாக ஏதாவது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதா எனத் தேடுதலில் ஈடுபட்டனர்.

அந்தவகையில், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டமை தெரியவந்தது.

இந்த நிலையில், நகையை தொலைத்த பெண்ணை அழைத்த நகைக்கடை உரிமையாளர், மதகுரு ஒருவருக்கு முன்னால் வைத்து அந்த நகையை நேற்றுக் கையளித்துள்ளார்.

நகையை தொலைத்த பெண்ணிடமே மீண்டும் நகையை வழங்கிய சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# அக்கரைப்பற்று கே.டீ.எச். அணி சம்பியன்!




(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று மூன் நைற் ஸ்டுடியோ ஆதரவில் “மெகா உள்ளக கிரிக்கெட் கொண்டாட்டம் -2025” மென் பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் சம்பியனாக அக்கரைப்பற்று கே.டீ.எச். அணி சம்பியனானது.

16 அணிகள் பங்கு கொண்ட இந்தத் தொடரின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று ஏ.எல்.எஸ். உள்ளக அரங்கில் வெள்ளிக்கிழமை (16) நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று கே.டீ.எச் அணியும் மூன் நைற் அணியும் மோதின.

05 ஓவர்களை சந்தித்து சகல விக்கெட்களையும் இழந்து மூன் நைற் அணி 18 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. எதிர்த்தாடிய கே.டீ.எச். அணி 02 ஓவர்களில் வெற்றி இலக்கைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

# முன்னாள் பொலிஸ் மா அதிபர் மீதான விசாரணை இன்று ஆரம்பமாகின்றது!

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் முறைகேடு மற்றும் பதவி துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட குழு இன்று (19) முதல் தனது விசாரணையைத் தொடங்கவுள்ளது.

குறித்த குழுவானது கடந்த சில வாரங்களாக நாடாளுமன்ற வளாகத்தில் கூடி முதற்கட்ட விசாரணைகளை நடத்தியது.

அதன்படி, தேசபந்து தென்னகோனுக்கு விசாரணைக் குழுவின் முன் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, தேசபந்து தென்னகோன் முதல் முறையாக விசாரணைக் குழுவின் முன் ஆஜராக உள்ளார் என்று நாடாளுமன்றத் தொடர்புத் துறை தெரிவித்துள்ளது.

அதன்படி, விசாரணைக் குழு இன்று (19) கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# நளீர் பவுண்டேஷனால் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு மின், குடி தண்ணீர் இணைப்பு

(நூருல் ஹுதா உமர்)

10 வருடங்களுக்கு மேலாக பல்வேறு சமூக நல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவரும் மத்திய முகாம் நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் ஊடாக மத்தியமுகாம் 12 கிராமம் முதலாம், இரண்டாம், மூன்றாம் வட்டாரங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மின் இணைப்புக்களும், குடி தண்ணீர் இணைப்பும் பெறுவதற்கான நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிதியுதவிகளை நாவிதன் வெளி பிரதேச சபை உறுப்பினரும், நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகருமான அபூபக்கர் நளீர் வழங்கி வைத்தார்.

நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பானது பல வருடங்களாக மக்களுக்கு சேவையாற்றி வருவதோடு அதன் ஸ்தாபகத் தலைவர் எம்.ஏ.நளீர் யின் முயற்சியால் பல நற்பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் 10 வருட நிறைவை முன்னிட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு தலா 6 லட்சம் ரூபா பெறுமதியான 10 வீடுகளை கையளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# புத்தளம் நெடுங்குளத்தின் வான் கதவு திறப்பு!

(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ்)

புத்தளத்தில் இரு தினங்கள் பெய்த கடும் மழையை அடுத்து, புத்தளம் நெடுங்குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது.

மேலும் மழை தொடரும் பட்சத்தில் ஏற்படும் வெள்ளப் பாதிப்பைக் குறைக்கும் வகையில் புத்தளம் மாநகர சபையால் நெடுங்குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வடக்கு மாகாண அரச வெசாக் தினம் வெலிஓயா மகாவலி மைதானத்தில்!

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு, வெலிஓயா பௌத்த பேரவை, வெலிஓயா பிரதேச செயலகம், வவுனியா வடக்கு பிரதேச சபை, மகாவலி அதிகார சபை மற்றும் பிரதேச அரச திணைக்களங்கள், பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து வடக்கு மாகாண அரச வெசாக் தினத்தை வெலிஓயா மகாவலி விளையாட்டு மைதானத்தில் நடத்தின.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெசாக் அலங்காரங்களுக்கு ஒளியூட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் மைதான நிகழ்வுகள் நடைபெற்றன.

அங்கு உரையாற்றிய ஆளுநர்,

முல்லைத்தீவு மாவட்டச் செயலராக இருந்தபோது இங்கு பல தடவைகள் வந்திருக்கின்றேன்.

நாம் எமது மாகாணத்தில் அனைத்து மதங்களின் நிகழ்வுகளையும் கொண்டாடுகின்றோம். அதனடிப்படையில் வெசாக் நிகழ்வு இன்று இங்கு கொண்டாடப்படுகின்றது. எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. கௌதம புத்தர் பெருமானும் அன்பைத்தான் போதித்தார். அவர் பரிநிர்வாணம் அடைந்த நாளையே இன்று நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த ஊர் மக்கள் அனைவரும் திரண்டு இங்கு வந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. – என்றார்.











# மாதகல் சமூகசேவையாளர் சிற்றம்பலத்தின் கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும்

நேர்மை – வெளிப்படைத்தன்மை – எளிமை இவையே சிற்றம்பலம் ஐயாவின் அடையாளங்கள். அவரை முன்மாதிரியாகக்கொண்டு இளைய வர்கள் அவரின் வழித்தடத்தை பின் தொடரவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மாதகலைச் சேர்ந்த விசுவநாதர் சிற்றம்பலத்தின் சமூகசேவைகளைப் பாராட்டி மதிப்பளித்து அவரின் வாழ்நாள் சாதனைகளை வாழும்போதே வாழ்த் தும் கௌரவிக்கும் விழாவும் நூல் வெளியீடும் மாதகல் இளைஞர் சங்க கலையரங்கத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்றன.

விழா நாயகன் மற்றும் விருந்தி னர்கள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வரவேற்கப்பட்டனர். இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் நடை பெற்றன.

இதன்போது பிரதம விருந்தின ராகப் பங்கேற்ற ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த மாதகல் மண்ணுக்கு நான் பிரதேச செயலராக, மாவட்டச் செயல ராக இருக்கும்போது வந்திருக்கின் றேன். இப்போது ஆளுநராகிய பின் னர் இரண்டாவது தடவையாகவும் வருகின்றேன். ஒவ்வொரு தடவை யும் வரும்போதும் எனக்கு பிரதேச செய லராக இங்கு கடமையாற்றிய நினைவு களே வருகின்றன. அந்தப் பயங்கர மான காலத்தில் கெடுபிடிகளுக்கு மத்தியில் இங்கு வந்து சென்றிருக் கின்றேன்.

வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு உரையாற்றியவர்கள் சிற்றம்பலம் ஐயாவைப்பற்றி ஒரு விடயத்தைக் குறிப் பிட்டிருந்தனர். அவரின் வெளிப் படைத்தன்மை பற்றி சிலாகித்திருந் தனர். ஒரு சதத்துக்கும் கணக்குக் காட்டக் கூடிய ஒருவர். இன்று இவ்வாறான வெளிப்படைத் தன்மையானவர்களைக் காண்பது அரிது. ஒரு நிறுவனம் வளர்ச்சி யடைவதற்கு வெளிப்படைத்தன்மை முக்கியம். வெளிப்படைத்தன்மை இருந் தால்தான் வெளிநாடுகளிலுள்ளவர் கள் உதவிகளைச் செய்வார்கள்.



சிற்றம்பலம் ஐயாவிடம் சிறந்த ஆளுமையும் தலைமைத்துவமும் இருக்கின்றது. அவர் யாரிடமும் சத்த மாகப் பேசமாட்டார். மக்களிடத்தில் அன்பாக நடந்துகொள்ளும் ஒருவர். அதனால்தான் இன்று ஊரே அவருக் கான கௌரவிப்பு விழாவுக்கு திரண்டு வந்திருக்கின்றது.

இன்று ஒரு நிறுவனம் சிறப்பாக இயங்குகின்றது என்றால் உடனே அங்கே புல்லுருவிகளும் வந்து விடுவார்கள். அவர்கள் அந்த நிறுவ னத்திலிருந்து எப்படி உழைக்க லாம் என்றே சிந்திப்பார்கள். இதனால் நாளடைவில் அந்த நிறுவனங்கள் வீழ்ச்சியடைகின்றன. ஆனால் உங்கள் சிற்றம்பலம் ஐயாவால் ஊரிலுள்ள பல நிறுவனங்களும் இன்றும் சிறப்பாக இயங்குகின்றன.

அவர் தனது இந்த 82 வயதிலும் ஊருக்காக உழைத்துக்கொண்டிருக் கின்றார். அப்படிப்பட்ட ஒரு மனிதரை ஊரே திரண்டு கௌரவிப்பது என்பது பாராட்டக்கூடியது. – என்றார்.

இந்த நிகழ்வில் 'கந்தன் அலங் காரம்' மற்றும் 'மாதகலின் விடி வெள்ளி' ஆகிய நூல்கள் வெளி யிடப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு மதி சுபாஜினி மதியழகன் மற்றும் சமயத் தலைவர்கள், புலம்பெயர் அமைப்புக் களின் பிரதிநிதிகள் எனப் பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

# பாகிஸ்தானின் ட்ரோன்களை முடக்கிய இந்திய டி4 கருவி



பாகிஸ்தான் மற்றும் உக்ரைன் ட்ரோன்களை முடக்கிய இந்திய தயாரிப்பு டி4 கருவிக்கு அமெரிக்காவைச் சேர்ந்த போர் நிபுணர் ஜான் ஸ்பென்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

எதிரி நாட்டு ட்ரோன்களை முடக்கி செயல் இழக்கச் செய்வதற்காக டி4 என்ற கருவியை இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (டி.ஆர்.டி.ஓ) உருவாக்கியது. இதில் எலக்ட்ரானிக் ஜாமர்கள், லேசர் கருவிகள் எதிரி நாட்டு ட்ரோன்களை கண்டுபிடித்து முடக்கும். இவற்றை பெல் நிறுவனம் தயாரித்தது. இந்த டி4 கருவியை ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இராணுவம் பயன்படுத்தியது. இது வெற்றிகரமாக செயல்பட்டு பாகிஸ்தான் மற்றும் துருக்கியின் சிறிய ரக ட்ரோன்களை முடக்கியது.

இது குறித்து ரவி ரஞ்சன் என்பவர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், “ இந்தியாவின் டி4 என்ற ட்ரோன் தடுப்பு கருவி தற்போது உலகத்தின் கவனத்தை கவர்ந்துள்ளது. ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இது வெற்றிகரமாக செயல்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டி4, போர்களத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தி, எதிரிகளை அச்சமடையச் செய்தது” என குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள அமெரிக்க போர் நிபுணரும், நவீன போர் மையத்தின் தலைவருமான ஜான் ஸ்பென்சர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இந்தியாவின் டி4 ட்ரோன் தடுப்பு ஆயுதத்தின் செயல்பாடு மிகவும் ஈர்த்தது. இந்தியாவை நோக்கி வந்த பாகிஸ்தான் மற்றும் துருக்கி ட்ரோன்களை முடக்கியதில் டி4 முக்கிய பங்காற்றியது. இது போன்ற குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட ட்ரோன் தடுப்பு கருவி அமெரிக்காவின் தெற்கு எல்லை பாதுகாப்புக்கு தேவை” என குறிப்பிட்டிருந்தார்.

பாகிஸ்தானுடன் ஏற்பட்ட மோதலில், இந்தியா பயன்படுத்தி தொழில்நுட்ப திறன்கள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் ஜான் ஸ்பென்சரின் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இவர் ஏற்கெனவே தெரிவித்த கருத்தில், “ பாகிஸ்தானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதலை முறியடித்து பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தியதில் இந்தியாவுக்கு வெற்றி கிடைத்துள்ளது. இதன் மூலம் பாகிஸ்தானில் எங்கேயும், எப்போதும் இந்தியாவால் தாக்குதல் நடத்த முடியும் என்பது தெளிவாகியுள்ளது” என குறிப்பிட்டிருந்தார்.

# ஏ.ஐ. ட்ரோன்களை வாங்கியது இந்தியா



செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன விபாட் ட்ரோன்கள் இந்தியா வந்துள்ளன.

இவற்றால் செங்குத்தாக மேலெழும்பவும், தரையிறங்கி தாக்குதல் நடத்தவும் இயலும். இதனால் இவை வி -டால் ட்ரோன்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இனிமேல் போர்க்களத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இயங்கும் ட்ரோன்கள் தான் ஆதிக்கம் செலுத்தும். இதனால் அமெரிக்கா மற்றும் இதர நாடுகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட விடால் மற்றும் விபாட் ட்ரோன்கள் இந்தியா வந்துள்ளன. இவற்றின் மூலம் போர்க்களத்தில் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ட்ரோன்களை உக்ரைன் பயன்படுத்தியது. இதற்கு போட்டியாக ரஷ்யா சமீபத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் இயங்கும் காமிகாசே ட்ரோன்களை அறிமுகம் செய்தது.

‘டுவிக்’ என அழைக்கப்படும் இந்த ட்ரோன்கள் எதிரிகளின் கவச வாகனங்களை இதர தளவாடங்களையும் அழிக்கும். இந்த டேட்ரோன் மணிக்கு 180 கிலோ மீற்றர் வேகத்தில் 30 கிலோ மீற்றர் தூரம் வரை பறந்த செல்லும். முழுவதும் தானியங்கி முறையில் செயல்படும் இந்த ட்ரோன்கள், ஜாமர்கள் மூலம் ஜி.பி.எஸ். மற்றும் தகவல் தொடர்பு இணைப்பு முடக்கப்பட்டாலும், இலக்குகளை வெற்றிகரமாக தாக்கிவிட்டு திரும்பும்.

இந்த ட்ரோன்களை, எலக்ட்ரானிக் அடிப்படையிலான எதிர்ப்பு ட்ரோன்களால் தடுக்க முடியாது. ட்ரோனின் செயற்கைகோள் அடிப்படையிலான நேவிகேஷன் திறனை தடுக்கும் வகையிலும், ட்ரோனை இயக்குபவருடனான தகவல் தொடர்பை குறைக்கும் வகையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீரில் வெடிக்காத 42 குண்டுகள் செயலிழப்பு



காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் மீட்கப்பட்ட 42 வெடிக்காத குண்டுகளை இந்திய இராணுவம் மற்றும் ஜம்மு காஷ்மீர் பொலிஸார் நேற்று செயலிழக்க செய்தனர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட போரில் காஷ்மீரை நோக்கி பாகிஸ்தான் இராணுவம் பீரங்கி தாக்குதல் நடத்தியது.

இதில் எல்லை கிராமங்களில் உள்ள மக்கள் பலர் இறந்தனர். பூஞ்ச் பகுதியில் மட்டும் 12 பேர் உயிரிழந்தனர். 42 பேர் காயம் அடைந்தனர். வீடுகளும் சேதமடைந்தன.

இந்நிலையில் இங்கு வெடிக்காத குண்டுகளும் ஆங்காங்கே சிதறி கிடந்தன. அவற்றை சேகரித்து செயலிழக்கும் செய்யும் பணி பூஞ்ச் மாவட்டத்தின் ஜுல்லாஸ், சலோட்ரி, தராத்தி மற்றும் சலானி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் இராணுவம் மற்றும் ஜம்மு காஷ்மீர் பொலிஸின் வெடிகுண்டு நிபுணர்கள் ஈடுபட்டனர். மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்றி 42 குண்டுகளை பாதுகாப்பு படையினர் செயலிழக்க செய்தனர்.




# பாகிஸ்தானுக்கு நிதி வழங்க நாணய நிதியம் 11 நிபந்தனை

சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பாக 11 நிபந்தனைகளை புதிதாக விதித்துள்ளது. இதையடுத்து, பாகிஸ்தானுக்கு விதிக்கப்பட்ட மொத்த நிபந்தனைகளின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது என எக்ஸ்பிரஸ் டிரிபியூன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நாளிதழ் மேலும் குறிப்பிடுகையில்,

"நிதி நெருக்கடியில் உள்ள பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் தெரிவித்தது. ஆனால், இதற்கு இந்தியா சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மேலும், பாகிஸ்தானுக்கு நிதியுதவி வழங்கும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த சூழ்நிலையில், அடுத்த கட்ட நிதி தொகுப்பை விடுவிப்பதற்கு பாகிஸ்தானுக்கு 11 நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

1. மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்.

2. 17.6 டிரில்லியன் ரூபா பட்ஜெட்டுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் தரவேண்டும்.

3. ஆண்டுக்கு 2 முறை எரிவாயு விலையை உயர்த்த வேண்டும். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் உற்பத்தி செய்ய ஆகும் செலவுக்கு இணையாக எரிவாயு விலையை உயர்த்த வேண்டும்.

4. மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவை வசூலிக்கும் வகையில் இந்த ஆண்டு ஜூலை 1 ஆம் திகதிக்குள் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

5. 2027 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிதியை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது குறித்த அறிக்கையை உருவாக்க வேண்டும்.

6. சர்வதேச நாணய நிதியம் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு நிர்வாக செயல்திட்டத்தை வெளியிட வேண்டும்.

7. வரி செலுத்துவோர்களை அடையாளம் காண்பது, பதிவு செய்வது, உரிய வரி வசூலிப்பது விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள தனித்தனியாக 4 குழுக்கள் ஜூன் மாதத்துக்குள் அமைக்க வேண்டும்.

8. தொழில்துறை எரிசக்தி பயன்பாட்டை தேசிய மின் கட்டமைப்புக்கு மாற்றும் வகையில் மே மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற வேண்டும்.

9. மின்சார கட்டணம் யூனிட்டுக்கு 3.21 இந்திய ரூபா என்ற உச்சவரம்பை ஜூன் மாதத்துக்குள் நீக்க சட்டம் இயற்றப்பட வேண்டும்.

10. 2035 ஆம் ஆண்டுக்குள் தொழில்துறை பூங்காக்கள் மண்டலங்களுக்கான அனைத்து நிதி சலுகைகளையும் நீக்குவதற்கு இந்தாண்டு இறுதிக்குள் பாகிஸ்தான் ஒரு மாற்று திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

11. சர்வதேச நாணய நிதிய கட்டுப்பாடுகளுக்கு இணங்கி 2026 ஆம் நிதியாண்டின் பட்ஜெட்டிற்கு ஒப்புதல் பெற வேண்டும். எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் அதை செய்து முடிக்க வேண்டும்.

இந்த புதிய நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்றால் நிதியுதவியின் அடுத்த கட்ட தொகுப்பு விடுவிக்கப்படாது என பாகிஸ்தானுக்கு சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு நிதியுதவி வழங்கினால் அது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் என்று இந்தியா ஏற்கெனவே கவலை தெரிவித்துள்ளது. இந்த நிலையில், அதுதொடர்பான எந்த நிபந்தனைகளையும் சர்வதேச நாணய நிதியம் விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# காஸாவுக்கு உணவு வழங்க இஸ்ரேல் அனுமதித்தது

கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ள காஸாவுக்கு உணவு வழங்குவதற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது.

காஸாவை முற்றுகையிட்டதன் பின்னர் அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதனை உறுதி செய்யும் வகையில் 10 வாரங்களின் பின்னர் இஸ்ரேல் இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிய பாதுகாப்பு படைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் தரைவழி தாக்குதலை தொடங்கிய சில மணி நேரத்தின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காஸாவில் 67 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் 361 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு புற்றுநோய்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன், புரோஸ்டேட் வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புற்றுநோய் அவரது உடலிலுள்ள எலும்புகளுக்கும் பரவியுள்ளதாக மருத்துவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஜோ பைடனுக்கு புற்றுநோய் இருப்பது கடந்த வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

கனடா முரசு

திங்கட்கிழமை | 19/05/2025

## ஒன்டாரியோ கார் விபத்தில் சிறுவர்கள் மூவர் உயிரிழப்பு

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தின் எடோபிகோ பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் மூன்று சிறார்கள் உயிரிழந்துள்ளனர். 02



# தமிழர் நினைவுரிமையை அங்கீகரித்தது கனடா அரசு

## சர்வதேச தமிழர் பேரவை அறிக்கை

தமிழர்களின் நினைவுரிமையை கனடா அங்கீகரித்தமை போன்று உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை அறிக்கையொன்றை வெளியிட்டு தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"நினைவேந்தல் உரிமை என்பது உலகம் முழுவதும் உள்ள மக்களின் அடிப்படை உரிமையாகும்.

போர்கள் நடந்த நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் மேம்பாட்டிற்காக நினைவேந்தல் உரிமை உதவுகிறது. 02

# கனடாவின் தமிழின அழிப்பு நினைவுத்தூபி ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது

## நிமால் விநாயகமூர்த்தி அறிக்கை



தமிழின அழிப்பின் நினைவு நாளில் கனடா நினைவுத்தூபி ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது என்று சர்வதேச தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனப்படுகொலை செய்யப்பட்ட எமது இனத்திற்கு விரைவில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அந்த நினைவுத்தூபி இன்னும் வலுப்படுத்தியுள்ளதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மே 18 இனவழிப்பு நினைவேந்தல் நாளில் எனது அஞ்சலியை தெரிவிக்கிறேன். அத்துடன் தமிழர்களின் நினைவேந்தல் உரிமை குறித்து உலகம் தமது கரிசனையை வலுப்படுத்த வேண்டிய தருணம் இதுவாகும்.

நினைவேந்தல் உரிமை என்பது உலகம் முழுவதும் உள்ள மக்களின் அடிப்படை உரிமையாகும். போர்கள் நடந்த நாடுகளில் 03



## ஒன்டாரியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மூன்று பேர் படுகாயமடைந் துள்ளனர்.

இந்த விபத்து ஹைவே Highway 401-இன் ரென்போர்த் ட்ரைவ் Renforth Drive கிழக்கு நோக்கிய வெளியேறும் பாதை யில் இடம்பெற்றுள்ளது.

வேகமாக வந்த வெள்ளை நிற Dodge Caravan வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, சிக்னலில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்பு நிற Chrysler மினி வானை மோதி கவிழ்த்தது.

அந்த Chrysler வாகனத்தில் ஆறு பேர் பயணித்திருந்தனர். 15 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறார்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், 6 வயது சிறுமி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

ஏனைய மூவர் 10 வயது சிறுவன், 35 வயதுடைய தாய் மற்றும் 40 வயதுடைய குடும்ப நண்பர் ஆகியோர் காயங்களுடன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

"மூன்று சிறு குழந்தைகளின் மரணம் என்னை பெரிதும் பாதிக்கிறது. இந்த கொடூரமான செயலில் காரணமானவர், அதிகபட்ச தண்டனையை எதிர்கொள்ள வேண்டும்" என ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் நடந்த நாடுகளில் நிலைமாறுகால நீதியாக கொல லப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதலுக்கான வழிமுறையாக நினைவேந்தல் முக்கிய வழிமுறை யாகிறது.

இலங்கையில் மரபுகளையும் ஞாபகங்களையும் நினைவுகளையும் அழிப்பதை ஒரு இனழிவப்பாக சிறிலங்கா அரசு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கையாண்டு வருகிறது.

1981 இல் யாழ் நூலக எரிப்பு தமிழர்களின் அறிவுடமையை அழிப்பதுடன் அவர்களின் அடையாளத்தையும் அழிக்கும் விதமாக நிகழ்த்தப்பட்டது.

போரில் ஆலயங்கள், மரபுரிமை மையங்கள் என தொன்மைச் சான்றுகளை இலங்கை அரசு அழித்து வந்துள்ளது.

போரின் நினைவிடங்களாக அமைந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் போரின் சாட்சியாகவும் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவுச் சேகரப்பு இடங்களாகவும் இருக்கின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்களும் உளவியல் ஆற்றுப்படுத்தலைச் செய்கின்ற நினைவிட உரிமையின் முக்கிய மையங்கள் ஆகும்.

போரின் இறுதியில் இலங்கை அரசு மாவீரர் துயிலும் இல்லங்களை திட்டமிட்டு புல்டொசர் கொண்டு அழித்தது.

இது எங்கள் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மனத்தாக்கங்களை உருவாக்கியது.

அதனால்தான் போரில் வென்ற அரசினால் தமிழ் மக்களை வெல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

2021ஆம் ஆண்டு, யாழ் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை இலங்கை அரசு இரவோடு இரவாக அழித்த நிகழ்வு உலகத் தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமின்றி பன்னாட்டுச் சமூகத்திலும் பெரும் அதிர்வை உருவாக்கியது.

அப்போதுதான் கனடாவில் ஒரு நினைவுச் சின்னத்தை அமைக்கவும் எண்ணமும் தோற்றம் பெற்றது. இன்று கனடா ஒரு நினைவுத் தூபியை அமைத்து இந்த உலகில் முன்னுதாரணமாக செயற்பாட்டைப் புரிந்துள்ளது.

இதன் வழியாக உலகின் நீதி முகமாக கனடா இருக்கின்றது, ஈழத் தமிழ் மக்களுடன் கனடா துணையிருப்பது மிக முக்கியமான பணி" என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ப்ரம்டன் நகரில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் கனடாவின் ப்ரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னத்தின் முன்பாக இடம்பெற்றுள்ளது.

தமிழர் தாயகங்கள் உட்பட, சர்வதேச அளவிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பாரிய வரலாற்றை தமிழர் தரப்பில் பதிவு செய்த இந்நாள், உயிரிழந்த தமிழ் உறவுகளுக்காக உணர்வு பூர்வமாக குரல் எழுப்பும் ஒரு நாளாக காணப்படுகின்றது.

இந்தநிலையில், வடக்கு மற்றும் கிழக்கில் இந்நாளை முன்னிட்டு தமது பிரிந்த உறவுகளுக்காக மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

இதன் தொடர்ச்சியாக கனடாவிலும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த புலம்பெயர் தமிழ் மக்கள் தமது நினைவேந்தல் நிகழ்வுகளை முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னத்தின் முன்பாக முன்னெடுத்துள்ளனர்.

புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட பலர் இந்நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உயிரிழந்த தமிழர்களுக்கு தமது உணர்வுபூர்வமான அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் மேம்பாட்டிற்காக நினைவேந்தல் உரிமை உதவுகிறது.

மோதல்கள் நடந்த நாடுகளில் நிலைமாறுகால நீதியாக கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறதலுக்கான வழிமுறையாக நினைவேந்தல் முக்கிய வழிமுறையாகிறது.

இலங்கையில் மரபுகளையும் ஞாபகங்களையும் நினைவுகளையும் அழிப்பதை ஒரு இனழிவப்பாக சிறிலங்கா அரசு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கையாண்டு வருகிறது.

1981இல் யாழ் நூலக எரிப்பு தமிழர்களின் அறிவுடமையை அழிப்பதுடன் அவர்களின் அடையாளத்தையும் அழிக்கும் விதமாக நிகழ்த்தப்பட்டது. போரில் ஆலயங்கள், மரபுரிமை மையங்கள் என தொன்மைச் சான்றுகளை இலங்கை அரசு அழித்து வந்துள்ளது.

போரின் நினைவிடங்களாக அமைந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் போரின் சாட்சியாகவும் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவுச் சேகரிப்பு இடங்களாகவும் இருக்கின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்களும் உளவியல் ஆற்றுப்படுத்தலைச் செய்கின்ற நினைவிட உரிமையின் முக்கிய மையங்கள் ஆகும். போரின் இறுதியில் இலங்கை அரசு மாவீரர் துயிலும் இல்லங்களை திட்டமிட்டு புல்டோசர் கொண்டு அழித்தது.

இது எங்கள் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மனத்தாக்கங்களை உருவாக்கியது. அதனால்தான் போரில் வென்ற அரசினால் தமிழ் மக்களை வெல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

2021ஆம் ஆண்டு, யாழ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை இலங்கை அரசு இரவோடு இரவாக அழித்த நிகழ்வு உலகத் தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமின்றி பன்னாட்டுச் சமூகத்திலும் பெரும் அதிர்வை உருவாக்கியது.

அப்போதுதான் கனடாவில் ஒரு நினைவுச்சின்னத்தை அமைக்கும் எண்ணமும் தோற்றம்பெற்றது. இன்று கனடா ஒரு நினைவுத் தூபியை அமைத்து இந்த உலகில் முன்னுதாரணமாக செயற்பாட்டைப் புரிந்துள்ளது.

இதன் வழியாக உலகின் நீதி முகமாக கனடா இருக்கின்றது. ஈழத் தமிழ் மக்களுடன் கனடா துணையிருப்பது மிக முக்கியமான பணி. தமிழர்களின் நினைவுரிமையை கனடா அங்கீகரித்தமை போன்று உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# பொறுப்புக் கூறலை அடைவதற்கும் எடுக்கப்படும் சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்து ஆதரிக்கும்

## *பிரதமர் மார்க் கார்ணி தெரிவிப்பு*

பொறுப்புக் கூறலுக்கும் உண்மை மற்றும் நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது என கனடா பிரதமர் மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து 16 வருடங்கள் ஆகிவிட்டன.

26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளில் இழந்த உயிர்களையும் சிதறிப்போன குடும்பங்களையும் பேரழிவடைந்த சமூகங்களையும் இன்று வரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவு கூருகின்றோம்.

அத்துடன் தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச் சமூகத்தையும் கனடாவின் பல பகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளையும் நாம் மனதிற்கொள்கின்றோம்.

பொறுப்புக்கூறலுக்கும் உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கின்றது.

இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும் போது துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும்.” என அவர் தெரிவித்துள்ளார்.



Office of the Prime Minister — Cabinet du Premier ministre

Ottawa, Canada K1A 0A2

**Statement**

For immediate release

**Statement by Prime Minister Carney to mark Tamil Genocide Remembrance Day**

May 18, 2025 — Ottawa, Ontario — Prime Minister's Office

Today, the Prime Minister, Mark Carney, issued the following statement to mark Tamil Genocide Remembrance Day:

"Today marks 16 years since the end of the armed conflict in Sri Lanka – a conflict that spanned over 26 years and killed tens of thousands of civilians.

"On this Tamil Genocide Remembrance Day, we remember the lives lost – the families torn apart, the communities devastated, and those who remain missing to this day. We also think of Canada's Tamil community, who carry with them the memory of loved ones, and the many remembrance services planned across Canada.

"Canada continues to support independent international efforts to seek accountability and push for truth and justice.

"As we mark this solemn anniversary, let it strengthen our resolve to act in tribute, with courage, and for lasting peace."

– 30 –

PMO Media Relations: media@pmo-cpm.gc.ca
This document is also available at https://pm.gc.ca

Canada